
புத்தகம் எழுதலாம் வாங்க
(100 டிப்ஸ்)
www.banukumar.in
பானுகுமார் படைப்புலகம்

# புத்தகம் எழுதலாம் வாங்க

# (100 டிப்ஸ்)

## மன்னார்குடி பானுகுமார்

- ஒரு புத்தகம் 100 நண்பர்களுக்குச் சமம். ஒரு புத்தகத்தை எழுதி அதனை அடுத்த தலைமுறைக்கு தருபவனே மனித குலத்தின் உண்மையான விடிவெள்ளி.
- இன்றைய நிலையில் ஒரு நூலை எழுதுவது மிக எளிது. நல்ல நூலை எழுதுவது கொஞ்சம் கடினம்! தனித்துவமான நூலை எழுதுவது இன்னும் கடினம்!
- பலர் விரும்பிப் படிக்கக் கூடிய நல்ல தனித்துவமான நூலை எழுதுவது பகீரதப் பிரயத்தனம்!
- *‘சிப்பி பொறுக்குவது எளிது, கடற்கரையிலேயே செய்யலாம்! முத்துகள் வேண்டுமென்றால் கடலுக்குள் ஆழ மூச்சடக்கி மூழ்க வேண்டும்!’* கடினம் என்றுதான் சொன்னேனே தவிர, இயலவே இயலாது என்று இல்லை!




- 'ஒரு மனிதன் வாழ்ந்தான் என்பதற்கு, அவன் ஒரு குழந்தையாவது பெற்றிருக்க வேண்டும்; ஒரு வீடாவது கட்டி இருக்க வேண்டும்; ஒரு நூலாவது எழுதி இருக்க வேண்டும்' என்பார்கள். எனவே, நண்பர்களே, வாழ்நாளில் எப்பாடு பட்டாவது ஒரு நூலாவது எழுதி வெளியிட்டு விடுவது

என்னும் உறுதிமொழியை இன்றே – இக்கணமே – எடுத்துக் கொள்ளுங்கள்.

- எதற்காக எழுதுகிறீர்கள் என்ற நோக்கத்தை வரையறை செய்து கொண்டால் நீங்கள் நினைப்பது அத்தனையும் நிறைவேறும். குழந்தைக்குக் கூடப் புரியும் என்பார்களே. அத்தனை எளிய நடையில் சொல்லப்பட்டிருக்கும் விசயங்களை நீங்கள் உள் வாங்கிக் கொள்ள வேண்டும்.
- உங்களுக்கு நம்பிக்கை இருக்கிறதோ இல்லையோ எழதுவது என்பது உண்மையிலேயே ஒரு யாகம்தான். அதை மிகுந்த ஈடுபாட்டுடன் ஒழுங்குமுறை தவறாமல் செய்ய வேண்டும். செய்யப் பழகிக் கொள்ளுங்கள்.



- ஜார்ஜ் பெர்னாட்ஷாவின் எழுத்துக்ளை திருப்பி அனுப்பியவர்கள் அநேகர். அவர் ஒரு நாளைக்கு இத்தனை பக்கம் எழுத வேண்டும் என்று நினைத்தால் அதை

எழுதிவிட்டுத்தான் வேறு வேலை பார்ப்பராம். நீங்களும் அப்படி இருக்க வேண்டும்.

- ஒரு புத்தகம் என்பது அதன் ஆசிரியனின் எண்ணங்களின் முத்திரை என்பதைத் தவிர வேறு எதுவாகவும் இருக்க முடியாது. இந்த எண்ணங்களின் மதிப்பு, அவன் சிந்தித்துப் பார்த்துள்ள விஷயத்திலோ, அல்லது அவனது எண்ணங்கள் எடுத்துள்ள வடிவத்திலோ, வேற மாதிரியாகச் சொன்னால் எதைப்பற்றிச் சிந்தித்துப் பார்த்திருக்கிறான் என்பதிலோதான் அடங்கியுள்ளது.
- எனவே ஒரு புத்தகத்தை பாராட்டும் போது அதனை அதன் கருத்துக்காகப் பாராட்டுகிறோமா அல்லது வடிவத்துக்காகப் பராட்டுகிறோமா என்பதை நிர்ணயிப்பதில் கவனம் வேண்டும். எழுத்தாளன் இதற்கேற்ப ஒரு வரையறையை வகுத்துக் கொள்ள வேண்டும்.
- நீங்கள் எழுதவதற்கு எப்படி தொடங்க வேண்டும்? உங்கள் வீட்டை விட்டு எங்கு வெளியில் சென்றாலும் சரி இதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். உங்கள் பார்வையில் படும் ஒவ்வொன்றும் உங்களுக்கு ஒரு வாய்ப்பைத் தரப் போகிறது.



- நீங்கள் பயணம் செய்து கொண்டிருக்கலாம். கடைக்குப் போய் காய்கறி வாங்கலாம். உங்கள் கவனம் எங்கே இருக்க வேண்டும் தெரியுமா? மனிதர்கள் மீதுதான். எத்தனைவிதமான மனிதர்களைப் பார்க்கிறீர்கள்? எல்லோரையும் மனதில் படம் பிடித்து வைத்துக் கொள்ளுங்கள்.. யாராவது எதையாவது வித்தியாசமாக செய்து வைப்பார்கள்.
- நீங்கள் இப்போதுதான் எழுத ஆரம்பித்திருக்கிறீர்களா? ஏற்கனவே புகழ் பெற்ற எழுத்தாளர்களாக இருப்பவர்களைக் கேளுங்கள். இதற்கெல்லாம் இதுதான் விதி என்று எதுவும் கிடையாது என்று சொல்பவர்கள் இருப்பார்கள்.
- அது உண்மையும் கூட. நிறையப் படிக்க வேண்டும். புத்தகங்களை, வாழ்க்கையை, மனிதர்களை, வளர்ந்தவர்கள் ஆரம்பத்தில் என்னென்ன சிரமங்களை எதிர்கொண்டார்கள் என்று கேளுங்கள். இதை சுவையாக விவரிப்பவர்கள் இருப்பார்கள்.




- மனிதன், கருவிலே பிறந்து தெருவிலே திரிவது போல், சிந்தனையும், உள்ளமெனும் உள்ளறையிலே பிறந்து உலகமென்னும் உருண்டையிலே உலவுகின்றது.

- உலகில் வாழும் ஒவ்வொரு மனிதனும் ஓயாமல் சிந்திக்கின்றான். உந்தியெழும் சிந்தனைகளைத் தான் விரும்பும் நேரத்தில் வார்த்தைகளாக வெளிப்படுத்துகின்றான். எண்ணங்களைச் சில சமயம் எழுத்துகளாகவும் எழுதிக் காட்டுகின்றான்.
- உள்ளத்தில் ஊமையாகவும் உதடுகளில் ஓசையாகவும் எழுகின்ற எண்ணங்கள் அவரவர் அறிவுக்கும் ஆற்றலுக்கும் தக்கவாறு, சிறுகதைகளாகவும், சிறந்த கட்டுரைகளாகவும், கருவடைந்த கவிதைகளாகவும் உருப்பெறுகின்றன.
- நீங்கள் சிந்னைகளின் ஊற்று என கருதுங்கள். நீங்கள் யார் என்று கேட்டால் என்ன சொல்வீர்கள்? நான் எழுத்தாளர் என்பீர்களா? இல்லை. நான் ஒரு சிந்தனைகளின் ஊற்று. புதிய உத்திகளின் சுரங்கம். சிந்தனைக் கடல் என்று சொல்லத் துணிவு இருக்கிறதா?
- இதைத் தற்பெருமை என்பதற்காகவோ தன்னடக்கம் தேவை என்பதற்காகவோ அடக்கி வாசிக்காதீர்கள். காட்டாற்று வெள்ளம் போல் உங்களிடம் புதுப்புது சிந்தனைகள் பொங்கி வர வேண்டும்.
- அப்போதுதான் எல்லாருக்கும் பிடித்தமான எழுத்துக்கள் பிரசவகிக்கும். வெளியே சொல்லத் தயக்கமாக இருக்கிறதா? சரி. மனத் தளவிலாவது இதில் உறுதியாக இருங்கள். இப்போது சொல்லுங்கள் நீங்கள் யார்?




- எடுத்த எடுப்பிலேயே எழுதுவதா என்று யோசிக்கிறீர்களா? முதலில் இந்தத் தயக்கத்தை விரட்டுங்கள். நீங்கள் பார்த்தை, கேட்டதை மனதில் பதிந்து வைத்துக் கொள்ளுங்கள்.
- 'நீங்கள் இதுவரை ஏன் நூல் எழுதவில்லை?' என்று பத்துப் பேரைக் கேட்டுப் பாருங்கள். அவர்களுள் பாதிப் பேர், 'யார் படிப்பார்கள்?' என்பார்கள்; மீதிப் பேர், 'யார் வெளியிடுவார்கள்?'

என்பார்கள்.




- உங்கள் எழுத்தில் சீரான ஒட்டம் முக்கியம். உங்கள் வாக்கியங்க்ள சிறியதாக அமையட்டும். நீண்ட வாக்கியங்கள் சலிப்பூட்டும். சின்னச்சின்ன வாக்கியங்களில் கோர்வையாகச்

சொல்லுங்கள். ஒரு பத்தியின் முடிவில் ஆர்வத்தைத் தூண்டுங்கள்.

- நீங்கள் எழுதும் பத்திகள் சிறியதாக அமைய வேண்டும். இரண்டு அல்லது மூன்று வரிகளுக்கு மேல் பத்தி அமைக்க வேண்டும்.




- பெரிய நீண்ட பத்திகளைக் காட்டிலும் சிறிய பத்திகள் கவர்ந்து இழுக்கக் கூடியவை. கம்ப்யூட்டரிலே அவுட் செய்வதற்கு

ரொம்பவும் வசதியானவை. சிறு பத்திகள் அழகுற வடிவமைப்பதற்குப் பெரிதும் உதவுபவை.

- பத்தி அமைப்பதற்கு விவிலியத்தைப் பாருங்கள். கண்ணதாசனின் ”அர்த்தமுள்ள இந்துமதம்” புத்தகத்தைப் பாருங்கள். பத்திகள் மிகச் சிறியதாகவே இருக்கும். இது வாசகர்களை சலிப்பில்லாமல் படிக்கத் தூண்டும்.




- தினமும் இவ்வளவு எழுத வேண்டும் என்று வைத்துக் கொள்ளுங்கள். அதைத் தொடர்ந்து கடைப் பிடியுங்கள். ஏதோ ஒரு எதிர்பாரா இடையூறா? சரி.நாளைக்கு இதற்கும் சேர்த்து எழுதினால் போகிறது.
- ஒவ்வொரு நாளும் ஒரு குறிப்பிபட்ட நேரத்தில் எழுதுவது என்று ஒழுங்கு வைத்திருக்கிறீர்களா? அதைத் தவறாமல் கடை பிடியுங்கள். இது ரொம்ப ரொம்ப முக்கியம். ஒன்றுமே

தோன்றவில்லை என்றாலும் எதையாவது எழுதுங்கள். அதுதான் முக்கியம்.

- உங்கள் படைப்பிற்கு சரியான தலைப்பினைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.
- சுருக்கமான தலைப்பு வாசகர்களைச் சுண்டி இழுக்க ஏற்றது. சுருக்கமாக இருப்பதை விடச் சுருக் என்று இருப்பது ரொம்பவும் முக்கியம். நீளமான தலைப்புகளைப் படிப்பதற்கு யாருக்கும் பொறுமை இருப்பதில்லை.
- முடிந்தால் மூன்று வார்த்தைகளுக்குள் தலைப்பை வைத்துப் பாருங்கள். அது முடியவில்லை என்றால் ஐந்து வார்த்தைகளாக இருக்கலாம். அதற்கு மேல நீட்டித்தல் சிரமம். நீங்கள் எதிர்பார்க்கும் பலன் கிடைக்காமல் போய்விடும்.





- உங்கள் படைப்பின் தலைப்பு தூண்டும் தலைப்பாக அமைய வேண்டும். தலைப்பைப் படித்ததும் வாசகரைப் படிக்க வைக்க வேண்டும். என்ன சொல்ல வருகிறார்கள் என்ற ஆர்வத்தைத் தூண்டும்படி இருக்க வேண்டும். பிரபல சொற்றொடர்கள். மேற்கோள்கள் போன்றவற்றை அப்படியே பயன்படுத்தலாம்.
- நீங்கள் இப்போதுதான் எழுத ஆரம்பித்திருக்கிறீர்களா? ஏற்கனவே புகழ் பெற்ற எழுத்தாளர்களாக இருப்பவர்களைக் கேளுங்கள். இதற்கெல்லாம் இதுதான் விதி என்று எதுவும் கிடையாது என்று சொல்பவர்கள் இருப்பார்கள்.




- ஒரு நாளில் எந்த நேரத்தில் எழுதுவது என்பது உங்கள் வசதியைப் பொருத்தது. தேவிபாலா அதிகாலை இரண்டரை மணிக்கு எழுத உட்காருவராம். நான் நேரம் கிடைக்கும் போதெல்லாம் எழுதுவேன்.
- ஆரம்பத்தில் இருந்து கடைசி வரை என்ன சொல்லப் போகிறோம் என்ற தெளிவு புத்தகம் எழுதத் தொடங்கும் முன்பே இருக்க வேண்டும். விரிவாக யோசிக்கத் தெரியவேண்டும். எழுத எடுத்துக் கொண்ட விஷயத்தின் பல்வேறு முகங்களை பார்க்கத் தெரியவேண்டும்.
- தனக்கான நோக்குநிலை என்ன என்பதைப் பற்றியும் தெளிவு வேண்டும். எந்த ஒரு ஸ்டாண்ட்டும் எடுக்காமல், உள்ளது உள்ளபடி தெரிவிக்க விரும்பினாலும் அதுவும் ஒரு நோக்கு நிலைதான். இந்த நோக்குநிலை தடுமாற்றமில்லாமல்


இருந்தால்தான், எழுத்தின் பின்னணியில் இயக்கும் தொனி சீராக இருக்கும்.


- அதிரடி வாக்கியங்கள், வெறும் அனுமானத்தின் பேரில் எழுதப்படும் வாக்கியங்கள் எல்லாம் எவை என்பதைப் பற்றிய தெளிவு வேண்டும். இப்படிப்பட்ட வாக்கியங்களைப் பயன்படுத்தும் முன்பு, அதற்கான உரிய ஆதாரமோ, ஆவணங்களோ இருக்கிறதா என்று உறுதி செய்துகொள்ள வேண்டும்.




- மிகவும் பொறுமை வேண்டும். பத்திரிகை கட்டுரை எழுதுவதில் காட்டக்கூடிய வேகம் இதற்கு எடுபடாது. அத்தியாயம் அத்தியாயமாக, ஒரு செடி வளர்ந்து தழைப்பதைப் போல், ஒரு புத்தகம் வளர முடியும். திட்டமிடலும், தொடர்ந்த உழைப்பும் மிக மிக அவசியம். எழுத எழுத மாளவே மாள மாட்டேன் என்கிறதே என்று எரிச்சல் எரிச்சலாக வரும். புத்தகத்துக்கு இந்த எரிச்சல் எதிரி.
- **நீங்கள் சிந்னைகளின் ஊற்று என கருதுங்கள். நீங்கள் யார் என்று கேட்டால் என்ன சொல்வீர்கள்? நான் எழுத்தாளர் என்பீர்களா? இல்லை. நான் ஒரு சிந்தனைகளின் ஊற்று. புதிய உத்திகளின் சுரங்கம். சிந்தனைக் கடல் என்று சொல்லத் துணிவு இருக்கிறதா?**
- **இதைத் தற்பெருமை என்பதற்காகவோ தன்னடக்கம் தேவை என்பதற்காகவோ அடக்கி வாசிக்காதீர்கள். காட்டாற்று வெள்ளம் போல் உங்களிடம் புதுப்புது சிந்தனைகள் பொங்கி வர வேண்டும்.**

- அப்போதுதான் எல்லாருக்கும் பிடித்தமான எழுத்துக்கள் பிரசவிக்கும். வெளியே சொல்லத் தயக்கமாக இருக்கிறதா? சரி. மனத் தளவிலாவது இதில் உறுதியாக இருங்கள். இப்போது சொல்லுங்கள் நீங்கள் யார்?
- எழுதும்போதுதான், நாம் எடுத்துக்கொண்ட விஷயத்தில் நமக்கு இருக்கக்கூடிய தகவல் போதாமை, ஞானம் போதாமை எல்லாம் பளிச்சென்று தெரியவரும்.





- அதுவரை ஒரு விஷயத்தைப் பற்றி எல்லாம் தெரிந்ததாக நினைத்துக் கொண்டு இருந்ததெல்லாம், 10 பக்கம் தாண்டும்போதே வற்றிப்போகும். திடீர் வெறுமை படர்ந்துவிடும். நமக்கு இவ்வளவுதான் தெரியுமா? என்று நம் மேலே நமக்குச் சந்தேகம் ஏற்பட்டு விடும்.
- இதற்கு இருக்கும் ஒரே மருந்து, எடுத்துக்கொண்ட தலைப்பு பற்றி படிப்பதும், மேலும் மேலும் படிப்பதுதான் எழுதுவதைத் தவிர எழுதுவதற்கு வேறு குறுக்கு வழியே இல்லை. எழுத்தைப் பற்றிய பிரமிப்போ, அயர்வோ ஏற்பட்டுவிட்டால், எழுத்தைப் பற்றி பகல்கனவு கண்டுகொண்டு இருக்கலாம்
- நீங்கள் எழுதியதை நீங்களே திருத்துவது சலிப்பூட்டுகிறதா? அப்படி அல்ல. நீங்கள் என்ன நினைத்துக் கொண்டு ஒரு


வார்த்தையைப் பயன்படுத்தினீர்கள் என்பது உங்களுக்குத்தான் தெரியும். திருத்தும்போது அது உங்களுக்கு மட்டுமே புரியும்.


- எழுதும் செய்தியில் நிரம்ப காதல் வேண்டும். கடனுக்குப் பேனா பிடிக்கக் கூடாது. எழுதத் தொடங்கும்போது காதல் இல்லையென்றாலும் எழுதிக்கொண்டே போகும் போதாவது அந்த ஆர்வத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும். இல்லையெனில், முடிக்கும்போது, மனத்தில் மகிழ்ச்சியோ உற்சாகமோ பூரிப்போ இருக்காது. வாங்கின கடனைத் திருப்பிச் செலுத்திய ஆசுவாசமும் நிம்மதியும்தான் இருக்கு
- ஒரு செய்தி பற்றி நீங்கள் எழுத விரும்பினால், அதில் என்னென்னவெல்லாம் எழுதப்படலாம் என்ற ஒரு டேபிள் ஆ஁ப் கண்டெண்ட் மட்டும் எழுதிக்கொண்டு புத்தகத்தை எழுதத் தொடங்குங்கள்.
- **ஒரு நல்ல வாசகனைக் கொண்டே, ஒரு நல்ல புத்தகம் அடையாளம் காட்டப் படுகிறது. ஒரு புத்தகத்தைத் திறக்கும்போது, உலகினை நோக்கிய ஒரு சன்னலைத் திறக்கிறோம்.**





- **"ஒரு புத்தகத்தை எழுதுவது எப்படி" என்பது இணையத்தில் மில்லியன் கணக்கானவர்களால் கணக்கிடப்படும் ஒரு தேடல்.** டிஜிட்டல் யுகத்தால் இலக்கியத் துறையை முடிவுக்குக் கொண்டுவர முடியவில்லை,

- புத்தகங்கள் பாணியிலிருந்து வெளியேறவில்லை. இன்று இருக்கும் மிகவும் பயனுள்ள மற்றும் விரிவான தகவல் தொடர்பு கருவிகளில், எழுத்து தொடர்ந்து நிலவுகிறது.
- உங்கள் கற்பனையின் மேதைகளை நீங்கள் பிடிக்க விரும்பினாலும், நீங்கள் சில அறிவை அனுப்ப விரும்புகிறீர்களா, அல்லது உலகுக்கு ஏதேனும் சொல்ல வேண்டுமா, ஒரு புத்தகம் எப்போதும் ஒரு நல்ல வழி.
- ஒன்றை எழுதுவது எப்படி? **பின்னர்**, இந்த குறுகிய, ஆனால் வளமான மற்றும் எளிய வழிகாட்டியில், **ஒரு புத்தகத்தை எழுதும் செயல்முறையை மிகச் சில படிகளில் எவ்வாறு முன்னெடுப்பது என்பதை 100 டிப்ஸ்களில் சுருக்கமாக தரப்பட்டுள்ளது,**
- முதலில் செய்ய வேண்டியது நீங்கள் எதைப் பற்றிய நூலை எழுத விரும்புகின்றீர்கள் என்று தீர்மானித்துக் கொள்ளுங்கள்.
- உங்களுக்கு **நன்கு தெரிந்த, பரிச்சயமான தலைப்புகளைத்** தேர்வு செய்வது நல்லது! நீங்கள் எந்தத் துறையில் வல்லுநரோ அதைப் பற்றி எழுதலாம். அல்லது, ஆர்வத்தினாலோ பொழுது போக்காகவோ நீங்கள் கற்கும், பின்பற்றும், செயல்படும் ஒரு துறை சார்ந்த நூலை எழுதலாம். எதுவாக இருந்தாலும் அதில் உங்களுக்கு நல்ல பரிச்சயமும் நிபுணத்துவமும் இருக்க வேண்டும்.
- ஒரு தாளை எடுத்து உங்களுக்குத் தெரிந்த துறைகளை / தலைப்புகளை எழுதுங்கள். ஒன்று முதல் ஐந்து வரை, தாளின் மேலே கிழே வரிசையாக அவற்றை எழுதிக்கொள்ளுங்கள்.







- அடுத்ததாக, அந்தத் துறையில், தலைப்பில் எந்தக் குறிப்பிட்ட தலைப்பில் உங்கள் நூலை எழுத விரும்புகின்றீர்கள் என்று எண்ணி, அந்தந்தத் துறைகளுக்குக் கீழே அதற்கான தலைப்புகளை எழுதுங்கள். இயன்றால், தலைப்புகளை நூலின் தலைப்பு போலவே எழுதிப் பாருங்கள்.
- **ஏன் நூல் எழுத வேண்டும்?** சொன்ன பயிற்சிக்குப் பின் உங்களிடம் சில தலைப்புகள் இருக்கும். அவற்றில் ஒன்றைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள்.அடுத்து நீங்கள் கேட்டுக்கொள்ள வேண்டியது.
- ***நான் ஏன் இந்த நூலை எழுத விரும்புகிறேன்?'*** ஒரு நூலை எழுத பல காரணங்கள் இருக்கலாம். ஆன்மீகம், தன்னம்பிக்கை, வரலாறு நூல்களைப் பொறுத்தவரை பின் வரும் சில காரணங்களைச் சொல்லலாம்:
- ***இந்தத் தலைப்பில் நான் சில புதிய கண்டுபிடிப்புகளைச் செய்துள்ளேன்.***
- ***ஏற்கனவே இருக்கும் கருத்துகளை என்னால் இன்னும் எளிதாகச் சொல்ல இயலும்.***
- ***இந்தக் குறிப்பிட்ட தலைப்பில் நூல் ஏதும் இதுவரை எழுதப்படவில்லை.***
- ***குறிப்பிட்ட குழு / மாணவர்களுக்கு ஏற்ற நூல் / பாட நூல் இல்லை.***





- பொதுவாக, ஒரு துறையில் நமக்கு இருக்கும் அறிவையும் புரிதலையும் பிறருக்குப் பயன்படும்படி வெளிப்படுத்த நாம் நூல் எழுத வேண்டும்.
- நாம் தேர்ந்தெடுத்த தலைப்பில் ஏற்கனவே நூல்கள் உள்ளனவா, அவை எப்படி உள்ளன, கருப்பொருளை அவை அலசும் / தரும் முறைகள் என்ன, அவை சரியாக இருக்கிறதா, அவற்றின் நோக்கத்தை அவை நிறைவேற்றுகின்றனவா என்றெல்லாம் அலச வேண்டும்.
- நெப்போலியன் ஒரு முறை சொன்னான். □நான் வாள் முனைக்குப் பயப்படவில்லை. ஆனால் பேனா முனைக்குத்தான் பயப்படுகிறேன்□ என்றார். □ என்றார்.□□□□ □□ □□□□□□□□ □□□□ □□□ □□□□□□□ என்றார்.
- ஒரு துளி மைக்கு பல லட்சம் ஆபர்களைச் சிந்திக்க வைக்கும் ஆற்றல் இருக்கிறது,
- எழுத்தாளராக ஆன பிறகு, ஆஹா! We wil l make it! We will share it with thousands of peopl e! இதோ ஒரு செய்தி. என்ற ஒரு பெரிய i nspi rati on. அந்த நேரத்தில் உருவாகும் இந்த share செய்து கொள்ள வேண்டும் என்ற ஆசை, நுணுக்கமான பார்வை இவை உங்களை ஒரு வெற்றியாளனாக ஆக்கிவிடும்.

- முன்பே ஒரு நூல் இருக்கிறது என்றால் நம் நூல் எவ்வகையில் தேவையாகிறது என்பதை நாம் நன்கு உணர வேண்டும். நம் நூலின் தனித்தன்மை என்ன என்பதை நாம் உணர்ந்திருக்கவில்லை என்றால் நாம் **அரைத்த மாவையே அரைப்போம்!**




- மேலும், **நூலின் வாசகர் யார்** என்பதில் தெளிவு வேண்டும்! உலகில் உள்ள 9..9 பில்லியன் மக்களுக்கும் நம்மால் ஒரு நூலை எழுத இயலாது!
- நாம் எழுத விரும்பும் நூலின் **இலக்கு வாசகர்** (□□□□□□ □□□□□□□) யார் என்பதில் நமக்குத் தெளிவு வேண்டும்.அவர்களின் தேவை என்ன, அந்தத் தேவையை நம் நூல் எப்படி ஈடுகட்டும் என்பதை நாம் உணர வேண்டும். இல்லை என்றால் நூலை எழுதியும் அது கண்டுகொள்ளப் படாமல் போய்விடும்.
- இக்காலத்தில் பல்லூடகங்கள்  பெருகிவிட்டன, எனவே ஒரு நூலாக தரப்படும் கருப்பொருளுக்கு ஏற்ற வரவேற்பும் தேவையும் இருக்குமா என்பதை நாம் தெளிவாக அலசி உணர வேண்டும், இல்லையேல் நம் வாழ்வின் பல மணிநேர உழைப்பையும் இன்னபிற இழப்புகளையும் கொடுத்து நாம் உருவாக்கும் நூல் அதற்குரிய மதிப்பைப் பெறாமல் போய்விடும் வாய்ப்புள்ளது!


- உங்களுக்கு ஆயிரம் அனுபவம் கிடைத்திருக்குமே? உங்களை அதிர வைத்த அனுபவங்கள் எத்தனை? நீங்கள் விரும்பி ரசித்த அனுபவங்கள் எத்தனை? உங்களைச் சோதனைக்கு உள்ளாக்கிய அனுபவங்கள் இருக்கின்றனவா? உங்களை மெய் சிலிர்க்க வைத்தவை எத்தனை? எத்தனை?
- இவை அத்தனையுமே உங்களுக்கு ஒவ்வொரு தங்கச் சுரங்கம் போன்றவை. அதிர்ச்சி, மகிழ்ச்சி, புகழ்ச்சி, இகழ்ச்சி என்று எத்தகைய அனுபவமாக இருந்தாலும் அவற்றைக் குறித்துக் கொள்ளுங்கள்.
- நீங்கள் அப்போது எப்படி உணர்ந்தீர்களோ அதே போன்ற உணர்வு வாசகர்களுக்கும் ஏற்படும். அவற்றைச் சொல்லுங்கள். நல்ல வரவேற்புக் கிடைக்கும். சொன்னால் நம்பமாட்டிர்கள் இருந்தாலும்...அது உண்மை என்று ஆரம்பியுங்கள்.




- நீங்கள் சொல்வது உண்மை அனுபவமாகவே இருக்கட்டுமே. அதில் கற்பனைச் சரக்கிற்கு இடம் வேண்டாம். அளவுக்கதிமாக அனுபவங்கள், கண்ணால் பார்த்தவை, காதால் கேட்டவை எல்லாவற்றையும் சொல்லுங்கள்..
- இத்தைகைய பொருள் குறித்த எழுதுவதற்கு முன்பு அது யாருக்காக எழுதப்படுகிறது என்பதை முடிவு செய்து கொண்ட


அதற்கு ஏற்ப கொடுங்கள். பெண்கள், மாணவர்கள், இளைஞர்கள், ஆன்மீக வாதிகள் என்று வகைப்படுத்திக் கொள்ளலாம்.

- உங்கள் அனுபவங்கள் எப்படிச் சுவையாக இருக்குமோ அதே போல மற்றவர்களின் அனுபவங்களையும் நீங்கள் எழுதலாம். இதற்கு நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் உங்கள் நண்பர்கள், உறவினர்கள், ஊழியர்கள் போன்றவர்கள் சொல்லும் விசயங்களைக் காது கொடுத்து கேட்பதுதான்
- நூலுக்கான தலைப்பும், அதன் தேவையும் நோக்கும் இலக்கு வாசகரும் நமக்குத் தெரிந்த பின், இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு நூலைத் திட்டமிட வேண்டும்.
- எடுத்துக்கொண்ட கருப்பொருளை எங்கு எப்படித் தொடங்கி எதுவரை அலசுவது என்பதை முதலில் திட்டமிட வேண்டும்.
- தெளிவான மொழி நடையில் அனைவருக்கும் விளக்க கூடியதாக எழுத வேண்டும். எழுத்து பிழைகள் இல்லாமல் எழுதவேண்டும்.





- சரியான குறியீடுகள் குறிப்பாக நிறுத்தல் குறியீடுகள், மேற்கோள் குறிகள் பொருத்தமான இடங்களில் பயன்படுத்துதல் வேண்டும்.
- படைபின் தலைப்பை நோக்கி என்..? எப்படி..? எதற்கு..? யார்..? என சில கேள்விகளை கேளுங்கள் அதற்கு விடையாக வருவதை கொண்டு சிறந்த படைப்பினை எழுத முடியும்.

- படிப்பவர்களை உங்கள் படைப்பை ஈர்க்குமாறு இருக்க வேண்டும். வாசகர்கள் ஆர்வமாக வாசிக்கும் படி எழுத வேண்டும்.
- உங்கள் படைப்பு என்பது எடுத்தல், தொடுதல், முடித்தல் என்ற வகையில் இருக்க வேண்டும்
- எழுதி முடிந்த உங்கள் படைப்பை கச்சிதமாக ஆக்குங்கள். சில வார்த்தைகள் உங்களையும் அறியாமல் திரும்பத் திரும்ப இடம் பெற்றிருக்கலாம். இரக்கம் வைக்காமல் வெட்டுங்கள். தேவைக்கு அதிகமான வர்ணனைக்கு இடம் அவசியமில்லையே.
- மனத்தின் உல்லாச உலாவைப் போல உங்கள் படைப்பு இருக்க வேண்டும்.
- சிறந்த பாடகன் ஒருவன், ராகம் ஒன்றை ஆலாபனை செய்வது போல், ஒரு பொருளையோ அனுபவத்தையே களையுடனும் சுவையுடனும் படைப்பில் இசைக்க வேண்டும்.
- கைதேர்ந்த "மாஜிக்" வித்தைக்காரன் ஒருவன், நெருங்கிய நண்பன் ஒருவனுடன் மனம் விட்டு உரையாடும் தோரணையில் படைப்பு அமைய வேண்டும்.
- மின்மினிப் பூச்சிமுதல் வானத்து நட்சத்திரம்வரை குழந்தையின் மலழை முதல் உயரிய கவிவாணரின் படைப்பு வரை, ஆணி அடிக்கும் செயல்முதல் அகிலத்தையே கிடுகிடுக்க வைக்கும் செய்கைவரை, வெட்டிப் பேச்சுமுதல் வேதாந்தம்வரை, எதைப்பற்றியும் எழுதலாம். எத்தனையோ விதங்களிலும் எழுதலாம். எதைப்பற்றி எந்தக் கோணத்தில் எழுதினாலும் இன்பம் ஊட்டும் படைப்பாக, மொழி விருந்தாக இருக்க வேண்டும்.




- நம் உள்ளத்தில் படிந்துள்ள இறைவனின் தெய்வீக மூச்சுக் காற்றின் வெப்பமே எழுத்து.
- எழுதுவது சில சமயங்களில் நம் கவனம் முழுவதையும் கவர்ந்திழுக்க வல்லது. சில சமயம் களைப்பூட்டுவது. என்றாலும் எனக்கு விருப்பமான தொழிலை என் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வருமானத்தையும் பெற முடிந்து என் அதிர்ஷ்டம் தான்" என்பார் ஆலடஸ் ஹக்ஸலி.
- நல்ல திறமை இருக்கும். சரளமான நடை கை வந்திருக்கும் சிறந்த மொழி வளமும் இருக்கும். இத்தனையும் இருந்தும் சிலரால் பேரும், புகழும் பெற முடியாமல் போகும். இதற்குக் காரணம்சில அடிப்படைத் தொழில் நுட்பத் தேவைகள்தான்.
- எழுத்தாளன் ஒருபோதும் தன் இன,மத,சாதி,மொழி அடையாளங்களை தன் அடையாளமாகக் கொள்ளலாகாது. அவை அவனது பேசு பொருட்கள் மட்டுமே. அவன் அதற்கு வெளியே இருப்பவனாகவே தன்னை உருவகித்துக் கொள்ள வேண்டும். நமது மரபு நமக்கு முக்கியம்.நாம் அதைக் கற்று உணர்ந்து அதன் சிறந்த அம்சங்களை சுயப்படுத்திக் கொள்ள வேண்டும். அதுவே நமது பண்பாடு என்பது.
- ஆனால் விமரிசனமில்லாமல் மரபை அணுகுவதென்பது மிகமிக அபாயகரமானதாகும். மரபின் மீது பக்தியோ நெகிழ்ச்சியோ கொள்வதில் பொருளில்லை. மரபின் எந்த விஷயமும் கருமையும் வெண்மையுமாக இருமுகத்துடனேயே

நம்மிடம் வந்துசேர்கின்றன. நாம் தவிர்த்தாகவேண்டிய பல விஷயங்கள் அவற்றில் உள்ளன என்பதை உணருங்கள்.




- நம் சாதி அல்லது இன அடையாளம் நம் பண்பாட்டின் அடிப்படையாக அல்லவா இருக்கிறது? அவற்றை உதறினால் நாம் ஒன்றுமில்லாதவர்களாக ஆகிவிடுவோமே? என்றார் வறீதையா. வேதசகாயகுமார்
- உங்கள் படைப்பின் கருவை ஒருபோதும் சுருக்கி எழுதிப் பார்க்காதீர்கள். இலக்கியத்தின் எதிரியே சுருக்குவதுதான். கருவில் ஒன்றுமே இல்லை. கலை இருப்பது நுண்விரிவில் – details- தான்.
- ஆக, உள்ளடக்கங்களைத் திட்டமிட வேண்டும். இயன்றால் **இயல், அதிகாரம்** (□□□□□□□, □□□□□□□) என்று வரையறுத்துக் கொண்டு அவற்றின் தலைப்புகளையும் முடிவு செய்துகொள்ளலாம்.
- **கவனிக்க**: இது ஒரு திட்டமிடல்தான். நூலை எழுதும் போது நமக்கு ஒரு வழிகாட்டியாக இது அமையும். இது உடைக்க முடியாத இரும்புக்கோட்டை அல்ல!
- நூலை எழுத எழுத இந்தத் திட்டத்தில் மாற்றங்கள் ஏற்படுவதைத் தவிர்க்க இயலாது! ஒரே அதிகாரத்தில் எழுதிவிடலாம் என்று நாம் எண்ணிய சில தலைப்புகள் இரண்டு மூன்று அதிகாரங்களாக நீளலாம், அல்லது, இரண்டு மூன்று அதிகாரம் நீளும் என்று எண்ணிய தலைப்பு ஒரே


அதிகாரத்திற்குள் குறுகிவிடலாம்...திட்டமிடல் ஒரு வழிகாட்டலுக்குத்தான்!





- மேற்சொன்ன மூன்றையும் செய்து முடித்தபின் நூலில் என்னென்ன எழுதப் போகிறோம், எப்படி எழுதப் போகிறோம் என்பது பற்றிய எண்ணம் உங்களுக்குத் தெளிவாகி இருக்கும். **இப்போது நீங்கள் நூலை எழுதத் தொடங்கலாம்**.
- உங்களின் தலைப்பையும் அதில் உங்களுக்குள்ள நிபுணத்துவத்தையும் பொறுத்து நீங்கள் நூலை அப்படியே எழுதலாம், அல்லது, தலைப்பிற்கேற்ற சிறு ஆய்வை மேற்கொண்டு, தகவல்களைத் திரட்டி / சரிபார்த்துக்கொண்டு எழுதலாம்.
- முதலில் **குறிப்புகளாக** எழுதிக் கொண்டு, பின் விரிவாக எழுதலாம்.அல்லது, முதலிலேயே விரிவாக எழுதிப் பின் அதனை மெய்ப்புத் திருத்தும் போது **தொகு**த்துக் கொள்ளலாம் (edi t ).
- [நூலைத் தொகுக்கும்போது நீங்கள் தேவை இல்லை என்று கருதி வெட்டி எடுக்கும் பகுதிகளை உடனே தூக்கி எறிந்துவிடாதீர்கள், அவற்றைத் தனியாக ஒரு கோப்பில் சேமித்து வைத்துக் கொள்ளுங்கள்! அவை பின்னர் இதே நூலிற்கோ அல்லது வேறு நூலிற்கோ பயன்படலாம்!
- **நீங்கள் சொந்தமாக ஒரு சிறிய நூலகத்தை வைத்துக் கொள்ள வேண்டியது அவசியத் தேவையாகும்.** **நீங்கள் எந்தத்**

தலைப்பில் எழுதத் தேர்வு செய்கிறீர்களோ அது தொடர்பான நல்ல புத்தகங்கள், பத்திரிக்கைகள், செய்தித்தாள்கள் போன்றவற்றைத் திரட்டிச் கோர்த்த ஒரு நல்ல நூல் நிலையத்தை அமைக்க வேண்டும்.


- உங்களுக்கு ஒரு விஷயம் மனமாரப் பிடித்திருந்து, அந்த விஷயத்தை நீங்கள் மனமொப்பி எழுதினால் போதும். அந்த எழுத்து, வாசகர்கள் மனத்தில் ரேஷன் கார்டில் கிழித்த கோடு போன்று ஆழமாய்ப் பதியும்.







- நூலகங்கள், பத்திரிகைகள் இரண்டும் இன்றையத் தமிழை வளர்க்கும் கருவூலங்கள். எவர் எவர் எழுத்திலே தெளிவு, உருவம் உளவோ அவற்றை மக்கள் பேணுவார்கள். "நான் உனக்குப் புலவன்",நான் உனக்கு ஆசான்" என்று எழுதும் மேதைகளை வாசகர்கள் ஒதுக்கி விடுவார்கள். "நான் உன் நண்பன்", நான் உன் தோழன்" என்று எழுதும் நபர்களை வாசகர்கள் அணைத்துக் கொள்வார்கள்.
- எழுத்தார்வம், சொல்வளம், இடையறாத ஊக்கம் மூன்றும் இருப்பவர்கள் எழுதிக் கொண்டிருப்பார்கள். முறையான மொழியறிவு, அன்ற தமிழ்ப் புலமையுள்ளவர்கள் பெருவாரியாக எழுத்தாளர்களாகப் பத்திரிக்கை உலகத்திற்குள் நுழைய முடிவதில்லை.


- மொழியின் இலக்கண இலக்கிய அறிவைவிட, எழுதும் ஆர்வம், சொல்ல வேண்டிய துடிப்பு, சொல்லாமல் தீராது என்னும் முயற்சியுள்ளவர்களே எழுத்தாளர்கள் என்னும் பெயரைப் பெறுவார்கள்.
- முறைப்படியான அனுமதி இல்லாமல் தகவல்கள், படங்களை பயன்படுத்துவது விரும்பத்தக்கதல்ல. அனுமதியைப் பெற்ற பிறகே பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.






- எதை எழுதுவது? குழம்பாதீர்கள். எதை வேண்டுமானாலும் எழுதுங்கள். எந்தச் சம்பந்தமும் இருக்க வேண்டியதில்லை. ஏன் எழுத முடியவில்லை என்று எழுதுங்கள். எழுத நினைப்பே வர மாட்டேன்கிறது என்று எழுதுங்கள். எழுதுவதை விட்டு விட்டால் என்ன ஆகும் என்ற எழுதுங்கள்.
- எதையாவது எழுதுங்கள். சும்மா இருக்க வேண்டாம். சும்மா இருக்கும் மனம் சாத்தானின் பட்டறை என்பார்கள். கட்டாயமாய் நான்கு வரி எழுத ஆரம்பியுங்கள். நான் பத்தாகும். பத்து நூறாகும். சரியாகிவிடுவீர்கள்.
- எழுதும் இரகசியத்தை ஒருவருக்கொருவர் சொல்லிக் கொடுக்க முடியாது. வித்துக்குள் விருட்சம் ஒளிந்து கிடக்கிற மாதிரி உங்களுக்குள் ஹாஸ்யம் எழுத்தாக வடிவம் எடுக்க வேண்டும். எழுத்தார்வம் உங்களுக்குள் ஒளிந்து கிடந்தால், நீங்களாகவே வெளிப்படுத்துவிர்கள். உங்களைப் பிறர் தூண்டி வெளியே கொண்டு வருவார்கள்.

- எழுதும் கலை கடினமானதாகவும் அபூர்வமாகவும் இருக்கிற கலை. இதில் வெற்றி பெற ஆசை தேவை.எழுதும் ஆசை இருந்தால் எழுத்து வரும். இந்த எழுத்து அழுகையாக வருவதும் உண்டு. சில சமயம் சிரிப்பாக வருவதும் உண்டு.
- நூல்களுக்கு மெய்ப்புத் திருத்தலும், தொகுத்தலும் மிக இன்றியமையாதவை! (Proofing and Editing. Editing comprises of Copy editing and Content editing). *‘சரசுவதியே வந்து நூல் எழுதினாலும் பிழைகள் இருக்கத்தான் செய்யும்’* என்பது என் கருத்து!
- எனவே, நூலை முடித்தவுடன் நீங்களே ஒன்றிரண்டு முறை மெய்ப்புத் திருத்தி, தொகுக்க வேண்டும்.பின், (நீங்கள் எவ்வளவு பெரிய நிபுணராக இருந்தாலும் பரவாயில்லை!) தொழில்முறை மெய்ப்புத் திருத்துனர் & தொகுப்பாளரிடம் நூலைக் கொடுத்துத் திருத்தி வாங்க வேண்டும். தேவையான மாற்றங்களைச் செய்து நூலை மெருகேற்ற வேண்டும்.









- தமிழைப் பொறுத்தவரை இந்த மெய்ப்புத் திருத்தல், தொகுத்தல் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை பல எழுத்தாளர்கள் உணர்வதில்லை!
- எழுத்தாளன் என்பவன் எழுத்தை ஆள்பவன். அவன் எந்த சூழிநிலையிலும் எந்தப் பணியில் இருந்தாலும் எழுத்தைப் பற்றிய சிந்தனை அவன் மனதில் சிறகடித்துக் கொண்டே

இருக்கும். அவனுடைய எண்ணம் சொல் செயலில் எழுத்துக்களே ஆக்ரமித்திருக்கும்.

- மனக்கோனல்களைக் களைவதும் புத்தகம்தான். மானத்தின் மேன்மையைக் காப்பதும் புத்தகம்தான். மன விகாரங்களை ஓட துரத்துவதும் புத்தகம்தான்.
- நூலகத்தில் நுழையா நாள் பிறவா நாளே! நூல் படியா நாள் உதவா நாளே!
- ஒரு நூலை, அதுவும் ஒரு நல்ல நூலை, எழுதுவது அவ்வளவு எளிதல்ல! அதற்கு நிறைய திட்டமிடலும், உழைப்பும் தேவை.
- ஆனால், அது இயலாத ஒன்றும் அல்ல! முறையான திட்டமிடலோடும் உழைப்போடும் முயலும் யார் வேண்டுமானாலும் எத்துறை சார்ந்தும் நல்ல நூலை எழுதிவிடலாம்.
- சராசரியாக ஒரு நூலை எழுதி முடிக்க ஒரு மாதம் முதல் ஆறு மாதங்கள்வரை ஆகலாம். சிலர் ஒரே வாரத்தில் ஒரு நூலை எழுதிவிடுவர்.சிலர் பல ஆண்டுகள் முயன்று உழைத்து ஒரு நூலை எழுதுவர். இதற்கு ஒரு பொத்தாம் பொதுவான விதி எதுவுமில்லை.
- உங்கள் தலைப்பையும், உழைப்பையும், திறனையும் பொறுத்து இது அமையும். எனவே, இடையில் சோர்வுற்று நிறுத்தி விடாதீர்கள்!



- இடையில் சோர்வு வந்தாலும், ஒரு இடைவேளை எடுத்துக்கொண்டு மீண்டும் விக்ரமாதித்யனைப் போல விடாமல் முருங்கை மரத்தில் ஏறுங்கள்- மன்னிக்கவும், நூலை எழுதுங்கள்! (பல இடைவேளைகளும் எடுத்துக்கொள்ளலாம்... இடைவேளை மட்டுமே எடுத்துகொண்டு நூலை எழுதாமல் விட்டுவிடாதீர்கள்!
- **ஒரு புத்தகம் எழுதுவது கூட சில திட்டமிடல் எடுக்கும்**. நீங்கள் இதை ஏற்கவில்லை என்றால், ஏதேனும் சீரற்ற விஷயத்தில் உங்களைத் தூண்டும் போதெல்லாம் எழுத முயற்சிக்கவும், முடிக்கப்படாத கையெழுத்துப் பிரதிகளை நீங்கள் நிரப்புவதைக் காண்பீர்கள், இப்போதெல்லாம் பத்துவிரல்களால் கணிணியில் எழுதுகிறோம். அவற்றை சேமிப்பதும் எளிதாக உள்ளது.
- **தொடங்குவதற்கு முன், புத்தகத்தைப் பற்றி குறைந்தபட்சம் ஒரு பொதுவான யோசனையாவது இருப்பது நல்லது**. இது எளிமையான ஒன்று,
- புத்தகத்தை உருவாக்கத் தொடங்குவதற்கு முன்பு நீங்கள் எதை அடைய விரும்புகிறீர்கள் என்பதை முழுமையாக வரையறுக்கிறீர்கள். இது போன்ற விஷயங்களில் கவனம் செலுத்துங்கள்: எந்த இலக்கிய வகையிலேயே இது அமைந்திருக்கும்? எந்த பார்வையாளர்களை இலக்காகக் கொண்டது? கதை வகை என்னவாக இருக்கும்?; மற்றும் மிக முக்கியமாக: வேலை அடைய நோக்கம் கொண்ட நோக்கம் என்ன?
- பிந்தையவர்களுடன் உங்களுக்கு சிக்கல்கள் இருந்தால், **புத்தகத்துடன் நீங்கள் அடைய விரும்பும் விஷயங்களின் பட்டியலை உருவாக்க வேண்டும்**.




- உங்களால் முடிந்தவரை பல தலைப்புகளைப் படியுங்கள், அவை உங்கள் வேலைக்கு நீங்கள் தேர்ந்தெடுத்த வகையினுள் அல்லது ஒத்த தலைப்புகளைக் கையாளும். **சிறந்ததாகக் கருதப்படுபவர்களை மட்டுமே வாசிப்பதைப் பற்றி கவலைப்பட வேண்டாம், ஏனென்றால் நீங்கள் கெட்டவர்களிடமிருந்தும் கற்றுக் கொள்கிறீர்கள்.**
- நீங்கள் ஒரு புத்தகத்தை எழுதத் தொடங்கும் போது - அல்லது அதைச் செய்வதற்கு முன்பே - **ஒரு அட்டவணையை நிறுவுவது அவசியம்**, தினசரி குறிக்கோள் மற்றும் நிறைவு தேதி. ஒரு எழுத்தாளராக, நீங்கள் தத்ரூபமாக உங்களை நீங்களே கேட்டுக் கொள்ள வேண்டும் –
- நிச்சயமாக, எந்த அழுத்தமும் இல்லாமல் - உங்கள் புத்தகத்தை எழுத ஒவ்வொரு நாளும் எத்தனை மணிநேரம் செலவிடலாம் அல்லது எத்தனை வார்த்தைகளை நீங்கள் அடையலாம்.


- உங்கள் கையெழுத்துப் பிரதியை முடிக்காமல் இருக்க இது செய்யப்படுகிறது. எனினும், **உதாரணமாக, நீங்கள் மிகவும் ஈர்க்கப்பட்டதாக உணர்கிறீர்கள் அல்லது தொடர்ந்து எழுத விரும்புகிறீர்கள், உங்களை அடக்க வேண்டாம்**. நீங்கள் விரும்பும் அளவுக்கு எழுத்து ஓட அனுமதிக்க வேண்டும்.




- அருங்காட்சியகம், ஒரு உயிருள்ள நிறுவனம் போன்றது. இந்த கட்டத்தில், நீண்ட அல்லது குறுகிய ஒரு புத்தகத்தை எழுதுவதற்கு ஒழுக்கமும் அர்ப்பணிப்பும் தேவை என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். எழுத நேரம் வரும்போது கவனச்சிதறல்களை நீங்கள் மறந்துவிட வேண்டும்.
- **ஒரு முக்கியமான விஷயம் என்னவென்றால், நீங்கள் குறைந்தது ஒரு நாளாவது ஓய்வெடுப்பதை உறுதிசெய்கிறீர்கள்,**

**ஏனென்றால் நீங்கள் அதை மிகைப்படுத்தினால், நீங்கள் செயலிழக்க நேரிடும்.**

- இருப்பினும், நீங்கள் நீண்ட நேரம் எழுதுவதை நிறுத்தினால், பின்னர் நீங்கள் எழுத்தின் நூலை எடுக்க மாட்டீர்கள். எச்சரிக்கையாக இருங்கள். முக்கியமான விஷயம் என்னவென்றால், சமநிலையை ஏற்படுத்துவது.







- உங்கள் புத்தகத்தின் அசல் யோசனையை மறந்துவிடாதபடி ஆரம்பத்தில் இருந்து இறுதி வரை ஒரு விரிவான விளக்கத்தை உருவாக்கவும், எழுதும் போது உங்களுக்கு வழிகாட்டவும். **படைப்பை வரையறுக்கும் அதே நேரத்தில் வாசகரின் ஆர்வத்தைத் தூண்டும் ஒரு குறிப்பிடத்தக்க தலைப்பைப் பற்றி யோசித்துப் பாருங்கள்.**
- எதை எழுதினாலும் தெளிவாக எழுத வேண்டும். பிறர் உள்ளம் புண்படாமல் எழுத வேண்டும்.
- சுவையாக எழுத வேண்டும். தெளிவாக எழுதுவதற்கு எழுதுபவன் தான் முதலில் தெளிவு பெறவேண்டும். பொருளைக் கடுமையான நடையில் அல்லாமல் எளிய நடையில் சொல்ல வேண்டும்.
- இனிமையாக எழுத வேண்டுமானல் உவமைகளையும், அழகான மேற் கோள்களையும் எடுத்துக் காட்ட வேண்டும்.


எல்லாச் சமயங்களும் சொல்கின்ற கதைகளையும், உவமைகளையும் தெரிந்து ஆளுதல் மிகப் பயன்தரும்.

- பொதுவாக இந்தக் காலத்திற்கு வேண்டிய சமயம் சார்ந்த படைப்புகள் கருத்துத் தெளிவுள்ளனவாகவும். கூடியவரையில் பகை உணர்ச்சியை உண்டாக்காதனவாகவும், சுவை உடையனவாகவும் இருக்க வேண்டும். இதற்கு நல்ல நூல்களை படித்து, சிந்தித்து, தெளிந்து அழகாகச் சொல்லும் திறமை வேண்டும்.
- எவனொருவன் இன்றைய நிலையை மட்டும் மனதில் கொண்டு படைப்பு எழுதாமல், வருங்காலத்தையும் ஊடுருவி நோக்கி தனது படைப்பை எழுதுகிறானோ, அவனுக்கும் அவனுடைய படைப்புகளுக்கும் எழுத்து உலகில் நிரந்தர இடம் உண்டு.




- எந்த மொழியில் படைப்பு எழுதப் போகிறீர்களோ அந்த மொழியில் ஓரளவு சொல் ஆட்சித் திறனும் இருந்தால்தான் உங்கள் படைப்புகள் வெற்றியடையும்.
- சொல்லாட்சித் திறனில்லாத எழுத்தாளன் எழுதிய படைப்பு, சமைக்கத் தெரியாதவன் தயாரிக்கும் சமையலைப் போன்றதுதான். அதில் ருசிகரமான பதார்த்தத்துக்குரிய "வெஞ்சனம்" எல்லாம் இருக்கும். அது சமைக்கப்பட்டும் இருக்கும். ஆனால் ருசிமட்டும் இருக்காது.
- என் கல்லறையில் மறக்காமல் எழுதுங்கள், இங்கே ஒரு புத்தகம் உறங்குகிறது என்று-- பெட்ரண்ட் ரஸ்ஸல்.

- **எழுதுவதற்கு முன் யோசிக்க வேண்டியது என்ன தெரியுமா?** திட்டமிடல், புத்தகத்தின் தலைப்பை தேர்ந்தெடுத்தல், எழுதுதல், நேரத்தை தீர்மானித்தல், எழுதுவதற்கு அர்ப்பணித்தல், திருத்துதல், வெளியிடுதல்.
- வேறு எங்கோ ஒரு அற்புத உலகில் வசிக்க விரும்புவோருக்காக கண்டுபிடிக்கப்பட்டது புத்தகம் மட்டுமே-- மார்க் ட்வைன்
- மேலே உள்ள அனைத்தையும் நீங்கள் பெற்றவுடன், எழுதுவதை கவனித்துக் கொள்ளுங்கள்; அது போல. **முக்கியமாக உங்களுக்காக எழுதுங்கள், முதலில் வெளிவரும் விஷயம் உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கிறது**. வாசகரைப் பற்றி சிந்திக்காதீர்கள் அல்லது ஒருவித அழுத்தத்தை உங்கள் மீது சுமத்த வேண்டாம்.
- சில நேரங்களில் எழுத்தாளர் ஒரு “வெற்றுப் பக்கம்” நிலையால் அவதிப்படுகையில், ஏனென்றால் அவர் வெறுமனே எதையும் எழுதவில்லை, ஏனெனில் அவரை நன்றாக உணர முடியும்.





- பணத்தைப் பற்றியும் சிந்திக்க வேண்டாம் **நீங்கள் ஒரு புத்தகத்தின் மூலம் செல்வத்தைக் கண்டுபிடிக்க முயற்சித்தால், இது வெற்றி பெறாது**. வேடிக்கைக்காக எழுதுங்கள். உங்களுக்கு

பிடித்த ஆசிரியர்களின் எழுத்தை மறந்துவிடுங்கள், எந்த சூழ்நிலையிலும் அவற்றைப் பின்பற்ற முயற்சிக்காதீர்கள்.

- உங்கள் சொந்த பாணியைப் பின்பற்றுங்கள், எல்லாவற்றையும் பாய்ச்சட்டும். செயலற்ற குரலைப் பயன்படுத்துவதைத் தவிர்க்கவும், எல்லாவற்றிற்கும் மேலாக, தவறுகளைப் பற்றி கவலைப்பட வேண்டாம்.
- **உங்கள் கையெழுத்துப் பிரதியை நீங்கள் முடித்த பிறகு, அதை மறந்து குறைந்தபட்சம் ஒரு வார இடைவெளி எடுத்துக் கொள்ளுங்கள்.** இந்த வழியில் நீங்கள் சரிசெய்ய வேண்டிய பகுதிகளை சிறப்பாக கவனிக்க முடியும்.
- இந்த நேரத்திற்குப் பிறகு, சுய எடிட்டிங் செயல்முறை தொடங்குகிறது. கையெழுத்துப் பிரதியை அதிக முயற்சி இல்லாமல் படிக்க முடியும் என்று அது முயல்கிறது. உங்களுக்கு உதவ இணையத்தில் டெஸ்க்டாப் வெளியீட்டு வழிகாட்டியைப் பெறலாம்.
- **சதி இடைவெளிகள் அல்லது முடிக்கப்படாத யோசனைகள் போன்ற உங்கள் புத்தகத்தில் குறைபாடுகள் அல்லது முரண்பாடுகளைக் கண்டறிய முயற்சிக்கவும்.**
- உருவகங்களை பகுப்பாய்வு செய்யுங்கள், எழுத்துப்பிழை சொற்களை சரிசெய்யவும், மீண்டும் மீண்டும் சொற்களை மாற்றவும், வாக்கியங்களையும் பத்திகளையும் சரிசெய்யவும், அதனால் அவை மிக நீளமாக இருக்காது. நெருங்கிய மற்றும் நேர்மையான சரிசெய்யவும், அதனால் அவை மிக நீளமாக இருக்காது.




- நெருங்கிய மற்றும் நேர்மையான வாசகர்களிடமிருந்து உதவி கேளுங்கள், அவர்கள் குடும்பம் அல்லது நண்பர்களாக இருக்கலாம். சில நேரங்களில் நம்முடைய சொந்த தவறுகளை அங்கீகரிப்பது கடினம், மற்றவர்கள் கவனிக்கும்போதுதான் அவற்றைப் பற்றி நாம் அறிந்து கொள்வோம்.
- நேரத்தைப் பொறுத்தவரை, நீங்கள் ஒரு புதிய எழுத்தாளராக இருந்தால், மெதுவாக செல்வது நல்லது. மறுபுறம், உங்களிடம் ஏற்கனவே ஒரு வாசிப்பு பொது இருந்தால், நீங்கள் வெளியிட அதிக நேரம் காத்திருக்க வேண்டியதில்லை.
- நீங்கள் புத்தகம் எழுத திட்டமிடும்போது – இது யதார்த்தமானதாக இருக்க வேண்டும், இவ்வளவு கோரக்கூடாது. உங்கள் வாழ்க்கை முறைக்கு ஏற்ற ஒரு திட்டத்தை உருவாக்கவும், உங்கள் இலக்கை அடைய கடிதத்தை நீங்கள் பின்பற்றலாம்.
- அட்டைப்படத்தில் சிறப்பு கவனம் செலுத்தி ஒரு தனித்துவமான வடிவமைப்புடன் உங்கள் புத்தகத்தை வடிவமைக்கவும்.
- புத்தகம் எழுதுகிற நீங்கள் வாழ்நாளெல்லாம் மற்றவர்களுடைய படைப்புகளையும் படித்துக்கொண்டே இருக்க வேண்டும்.




- சிறுகதைகளோ, காவியம், சமயம், ஆன்மீகம், நாவல், நாடகம் போன்ற இலக்கியங்களையும், உலக அனுபவங்களையும் கற்றுக் கொண்டே இருக்க வேண்டும்.
- தான் காண்கிற, கேட்கற, படிக்கிற, அனுபவிக்கிற ஒவ்வொன்றனுடைய உண்மைகளையும் சாரத்தையும் கண்டறிவதற்கு முயலவேண்டும்.
- பிறர் செய்யாத ஒரு காரியத்தை அல்லது ஒரு புதுமையை சாதிப்பதற்கு மட்டும்தான் புத்தகம் எழுத வேண்டும்.
- எழுதும் பயிற்சியை நிரந்தரமாக வைத்துக் கொள்ள வேண்டும். நீண்ட காலம் எழுதாமல் நிறத்திவைப்பது தவறு. எழுத எழுதத்தான் எழுத்து சிறக்கும். சித்திரமும் கைப்பழக்கமும் என்பது போல், எழுத்துச் சித்திரமும் கைப்பழக்கத்தால்தான் சிறக்கும்.
- ஆன்மீக புத்தகம் எழுதுவது எப்படி? ஆன்மீகம் என்பது தலைமுறைகளாக தேடக்கூடிய ஒரு விஷயமாக உள்ளது. எனவே இதன் அவசியம் எல்லா காலங்களிலும் உள்ளது. வேகமாக ஓடிக் கொண்டிருக்கும் நம் வாழ்கையில், நின்று நிதானிக்க, ஆழ் மனதை அமைதிப் படுத்திக் கொள்ள நமக்கு


ஆன்மீகம் தேவையாக உள்ளது. எனினும் நீங்கள் அப்படியே உட்கார்ந்து உங்கள் மனதில் உள்ளதையும், வாழ்வில் நடந்ததையும் ஆன்மீக புத்தகத்தில் எழுத முடியாது.





- ஆன்மீகத்தில் நம்பிக்கையும், உலகத்தையும் மற்றும் கடவுள் மேல் அல்லது குறிப்பிட்ட கடவுளைப் பற்றியும் எழுத வேண்டும். ஆன்மீகத்தில் நமது சொந்த அனுபவத்தை விடவும் நிறைய உள்ளது. நீங்கள் மனதில் வைத்துக் கொள்ள வேண்டியது என்னவென்றால், ஒவ்வொரு மனிதனும் வேறுபட்டவன், அதிலும் ஆழ்மனம் சார்ந்த விஷயங்களில். நீங்கள் சென்ற வழி உங்களுக்கு ஆழ் மன அமைதியைப் பெற உதவியது என்றால், மற்றவருக்கும் உதவும் என்று அவசியம் அல்ல. முக்கியமாக நீங்கள் எழுதும் ஆன்மீக புத்தகம் படிப்பவரின் ஆன்மீக தேவையை நிறைவு செய்யக் கூடியதாக இருக்க வேண்டும்.
- உங்கள் பாதையைத் தேர்வு செய்யுங்கள்: ஒரு ஆன்மீகப் புத்தகம் எழுதுகிறீர்கள் என்றால், நீங்கள் அதன் மூலம் அனுபவித்து உணர்ந்ததாக நினைத்துக் கொள்ளுங்கள். உங்களது புத்தகத்தில் ஏதேனும் ஒரு வழிமுறையை பின்பற்றி எழுதுங்கள், பொதுவாக வாசகர்கள் ஆன்மீக அமைதி பெற ஏதேனும் ஒரு வழிமுறையைக் கொண்ட புத்தகத்தையே வாங்க விரும்புவார்கள். பொதுவான கருத்து கொண்டதை அல்ல.
- உங்கள் அனுபவத்தை பகிருங்கள்: உங்கள் வாழ்க்கைக் கதையைக் கூருங்கள். உங்கள் ஆன்மீகப் பயணத்திற்கான காரணத்தினை கூறுங்கள். அது மரணத்திற்கினையானதாக

இருந்ததா அல்லது ஆன்மீகப் பாதையில் பயணிப்பது எவ்வித உணர்வைத் தந்தது என்பதைக் கூறுங்கள்.


- அருமையான வார் த்தைகளைத் தேர்ந்தெடுத்து எழுதுங்கள். உங்கள் கதையை கூறுவதாக மட்டும் இருக்கக் கூடாது, படிப்பவரின் மனதில் பதிந்து அவரின் மனதை ஆன்மீக வழியில் கொண்டு செல்லக் கூடிய ஆழமான மற்றும் சிறந்த வார்த்தைகளை உபயோகப் படுத்த வேண்டும்.
- நீங்கள் ஒரு ஆன்மீக சிந்தனையாளராக இருப்பதை விட ஒரு ஆன்மீக குருவாக இருக்க வேண்டும், நீங்கள் உங்கள் வாசகர்களை ஆன்மீக வழியில் கொண்டு செல்பவராக இருக்க வேண்டும் மாறாக அவர்களிடம் உங்களது கருத்தைத்தையோ அல்லது உணர்ச்சி பூர்வமான கோட்பாடுகளையோ அவர்கள் மேல் திணிக்காதீர்கள், அது அவர்களை ஆன்மீக வழியில் இருந்து விலகிச் செல்ல வைத்து விடும்.







- அனுபவரீதியான உண்மையைக் கூறுங்கள்: உங்கள் வாழ்வில் நிகழ்ந்த உண்மைச் சம்பவங்கள், அதன் மூலம் ஏற்பட்ட மனக் குழப்பங்கள், அதன் விளைவுகள், மற்றும் உங்கள் மன நிலை குறித்து எழுதுங்கள். இது வாசகர்களுக்கு தங்களுக்கு ஏற்பட்ட நிகழ்வு போல உணரச் செய்யும். படிப்பவரின் மனதில் தாக்கத்தை ஏற்படுத்தும்.

- வாசகர்களைச் சந்தியுங்கள்: உங்கள் புத்தகத்தை பிரசுரியுங்கள். ஆன்மீக புத்தகங்களை பிரசுரிப்பவர்களிடம் சென்று பிரசுரியுங்கள். இது சில நேரங்களில் கடினமாக இருக்கலாம், நமது படைப்புக்கும், பிரசுரிப்பவரின் எதிர்பார்ப்புகளுக்கும் பொருந்தாமல் போகலாம். நீங்கள் தனியாகவே உங்கள் புத்தகத்தைப் பிரசுரிக்கலாம். இவ்வித படைப்புகளில் அங்கீகாரம் கிடைக்க சிறிது காத்திருக்க வேண்டி வரலாம். பொறுமையுடன் காத்திருங்கள். சிறந்த விற்பனை முறையையும், விற்பனைத் தந்திரத்தையும் பயன் படுத்துங்கள். உங்கள் புத்தகங்களுக்கு அங்கீகாரம் பெறுங்கள்.






- ஒருவர் மூளைக்கும் இருக்கும் சிந்தனை மகரந்தங்களை மற்றொரு மூளைக்குள் கொண்டு செல்லும் தேனீக்கள்தான் புத்தகம்- துப்பாக்கிகளைவிட பயங்கரமான ஆயுதங்கள் புத்தகங்கள்--மார்ட்டின் லூதர் கிங்.
- உங்கள் நம்பிக்கையை உணர்த்துங்கள்: உங்கள் அனுபவத்தைப் பகிர்ந்து கொண்ட பிறகு, அதனை நீங்கள் ஆழமாக விளக்கிக் கூற வேண்டும். உங்கள் ஆன்மீக பயணமும், நிகழ்ச்சிகள், அதன் மூலம் கிடைத்த அனுபவம், அதனால் கிடைத்த தெளிவு இவற்றை எடுத்துக் கூற வேண்டும்.
- ”எழுத்தாளனாக எப்படி ஆவது? சரியான கேள்வி?

இதற்கு எளிதில் பதில் சொல்லிவிடலாம். எழுதிப் பாருங்கள். முதல் முறை வெற்றி பெறாவிட்டால் மறுமுறை முயலுங்கள். அப்போழுதும். வெற்றி கிடைக்காவிட்டால் மற்றொரு முறை முயற்சி செய்யுங்கள்! அதிலும் பிரயோசனமில்லையா? விடாதீர்கள் எழுதுங்கள், எழுதிக் கொண்டே இருங்கள். என்றைக்காவது ஒரு நாள், உங்கள் படைப்பு அச்சில் வராமலா போகும். முயற்சியுடையார் இகழ்ச்சியடையார் என்ற முதுமொழியைக் கேட்டதில்லையா?

## துணைநின்ற நூல்கள்

1. நீங்களும் எழுதலாம் வாங்க
2. நானும் என் எழுத்தும்
3. நான் ஏன் எழுதுகிறேன்?
4. வேதாத்திரியத்தில் எழுதலாம் வாங்க
5. ஒப்பாய்வு இலக்கியம் எழுதலாம் வாங்க.
6. இணையதள தகவல்கள்
7. பானுகுமார் படைப்புலகம்

# பானுகுமார் படைப்புலகம்

(171 புத்தகங்கள -31.12.2021 வரை)

PDF www.banukumar.in







## ஆன்மீகம்

1. தியானம் பழக 100 தியான சிந்தனைகள்
2. அறிவியல் நோக்கில் 100 ஆன்மீகச் சிந்தனைகள்
3. தியானம் பழக 100 தியான சிந்தனைகள்
4. அறிவியல் நோக்கில் 100 ஆன்மீகச் சிந்தனைகள்
5. கோள்களை வென்ற இடைக்காட்டுச் சித்தர்

## வாழ்க்கை வரலாறு

1. நெப்போலியன் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
2. புத்தர் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
3. இயேசுவின் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
4. குருவுடன் வாழ்ந்தவர் (புலவர் தியாகராஜனார்)
5. வேதாத்திரி மகரிஷி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்

## தன்னம்பிக்கை தன்னம்பிக்கை

1. தன்னம்பிக்கை மலர்கள்.
2. டென்சனை வெல்வது எப்படி?
3. காலமே உன் உயிர்
4. வேதாத்திரி மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்
5. ஓய்வுக்குப் பின்னும் உற்சாக வாழ்க்கை

## வேதாத்திரி மகரிஷி 1

1. இந்திய தத்துவ வரலாற்றில் வேதாத்திரி மகரிஷி
2. வேதாத்திரி மகரிஷி பற்றி 100 அறிஞர்கள்.
3. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 1)
4. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 2)
5. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 3 )
6. தினசரி தியானம்.
7. வரலாறு போற்றும் குரு சீடர்கள்
8. “வாழ்க வளமுடன் என்ற வார்த்தை! சரியா? தவறா? இலக்கணம் என்ன சொல்கிறது?
9. பன்முகப்புரட்சியில் வேதாத்திரி மகரிஷி
10. பன்முகப் பார்வையில் வேதாத்திரி மகரிஷி
11. வேதாத்திரி மகரிஷியின் தத்துவ தரிசனங்கள்
12. எல்லாம் வல்ல தெய்வமது
13. போரில்லா நல்லுலகம்
14. அதுவானால் அதுவே சொல்லும்
15. உய்யும் வகை தேடி அலைந்தேன்.
16. தினந்தோறும் வேதாத்திரியம்
17. வாழும் வேதாத்திரியம்

18. என்னைச் செதுக்கிய வேதாத்திரியத்தின் ஞானக்களஞ்சியம்
19. வேதாத்திரி மகரிஷி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
20. மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்
21. தாயுமானவர் வள்ளலார் வேதாத்திரி மூவரும் ஒருவரே
22. வேதாத்திரியம் கற்போம்
23. மனைவிக்கு மரியாதை
24. எல்லாம் வல்ல தெய்வமது
25. வேதாத்திரியப் பார்வையில் வறுமை என்பது இல்லை.
26. அவதாரப் புருஷர் அருட்தந்தை
27. வேதாத்திரியம் ஒரு ஜீவ யாத்திரை

## ஒப்பாய்வு (வேதாத்திரி மகரஷி)

1. வள்ளலாரும் வேதாத்திரி மகரிஷியும்.
2. மகாவீரரும் வேதாத்திரி மகரிஷியும்
3. தாயுமானவரும் வேதாத்திரி மகரிஷியும்
4. ஞாலம் போற்றும் ஞானிகள்
5. வேதாத்திரியத்தில் கலந்த நதிகள்.
6. ஞானதீபமும் ஞான ஒளியும்.
7. கிழக்கும் மேற்கும்
8. வேதமுதல்வரும் வேதாத்திரியும்
9. ஞான வள்ளல்கள் (ஸ்ரீராமகிருஷ்ணரும் வேதாத்திரி மகரஷியும்)
10. பாமரமக்களின் தத்துவஞானிகள் (அச்சில்)
11. சித்தர்களும் வேதாத்திரி மகரிஷியும்.
12. மாணிக்க வாசகரும் வேதாத்திரியும்
13. சிவவாக்கியாரும் வேதாத்திரி மகரிஷியும்.
14. ஆனந்தக் களிப்பும் பேரின்பக் களிப்பும்
15. சுகவாரியும் பேரின்ப ஊற்றும்
16. பட்டினத்தாரும் வேதாத்திரி மகரிஷியும்
17. கன்பூசியசும் வேதாத்திரி மகரிஷியும்
18. ஐன்ஸ்டைனும் வேதாத்திரியும்
19. ஷேக்ஸ்பியரும் வேதாத்திரியமும்

## தாயுமானவரும் வேதாத்திரி மகரிஷியும் (ஒப்பாய்வு)

1. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆனந்தமான பரம்.
2. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சின்மயானந்த குரு.
3. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பொருள் வணக்கம்.
4. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் தேஜோமானந்தம்.
5. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் எங்கும் நிறைந்த பொருள்..
6. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சச்திதானந்த சிவம்.
7. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் கருணாகரக் கடவுள்
8. தாயுமானவர் வள்ளலார் வேதாத்திரி மூவரும் ஒருவரே
9. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பாயப்புலி
10. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பைங்கிளிக் கண்ணி
11. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பொன்னை மாதரை
12. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆகார புவனம்
13. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் எந்நாட்கண்ணி
14. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சித்தர் கணம்
15. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் மௌனகுரு வணக்கம்
16. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் மலைவளர்க் காதலி
17. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் இந்திரியங்களின் கொட்டம்
18. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் மனம் என்னும் மாயை
19. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆறுபகைவர்கள்
20. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் அருள்தாகம்
21. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் இறைவழிபாடு
22. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் வழிபாடு ஏன்,
23. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆனந்த இயல்பு
24. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பராபரக்கண்ணி பாகம் 1
25. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பராபரக்கண்ணி பாகம் 2
26. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பராபரக்கண்ணி பாகம் 3

## திருவாசகமும் வேதாத்திரியமும் (ஒப்பாய்வு)

1. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் யாத்திரைப் பத்து.
2. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அச்சப் பத்து.

3. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அடைக்கலப் பத்து.
4. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் செத்திலாப் பத்து.
5. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அதிசயப் பத்து.
6. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் உயிர் உண்ணிப் பத்து.
7. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குழைத்தப் பத்து.
8. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் பிடித்தப் பத்து.
9. வேதாத்திரியப் பார்வையில்திருவாசகத்தின் பிரார்த்தனைப் பத்து.
10. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சிவபுராணம்
11. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆசைப் பத்து
12. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அச்சோ பதிகம்
13. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அருட்பத்து
14. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அற்புதப்பத்து
15. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அன்னைப்பத்து
16. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் கண்டபத்து
17. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குயிற்பத்து
18. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சென்னிப்பத்து
19. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் புணர்ச்சிப்பத்து
20. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் வாழாப்பத்து
21. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆனந்த பரவசம்
22. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குலாப்பத்து

## பாரதியாரும் வேதாத்திரியமும் (**ஒப்பாய்வு**)

1. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் ஞானப்பாடல்கள்
2. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் தத்துவப் பாடல்கள்
3. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் பிரம்மஞானம்
4. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் மானுட சிந்தனைகள்

## ஜென்னும் வேதாத்திரியமும்

1. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 1
2. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 2
3. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 3
4. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 4
5. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 5

## தாயுமானவர் தாயுமானவர்

1. சேரவாரும் ஜெகத்தீரே
2. தாயுமானவரின் இலக்கிய நயம்
3. தாயுமானவரின் மெய்ப்பொருள்
4. தாயுமானவரின் சமயநெறி
5. தாயுமானவரின் உடல் பொய்யுறவா?
6. தாயுமானவரின் கடவுள் கோட்பாடு
7. தாயுமானவரும் மகான்களும்
8. தாயுமானவர் ஆன்மீக வாதியா? அரசியல் ஞானியா?
9. தாயுமானவர் தரும் இடம், பொருள், ஏவல்
10. தாயுமானவரின் அத்வைதமும் வேதாத்திரியின் அத்வைதமும்
11. தாயுமானவரின் ஆன்மீகச் சிந்தனைகள்
12. தாயுமானவரின் ஞானதாகம்
13. தாயுமானவரின் இலட்சியப் பயணம்
14. தாயுமானவரின் பிரபஞ்சக் கோட்பாடு
15. தாயுமானவரின் உயிர் விளக்கம்
16. GARLAND OF PARAAPARAM
17. தாயுமானவர் போற்றும் அறம்
18. அறிவேதான் தெய்வமென்றார் தாயுமானவர்
19. ஏன் அவதரித்தார்கள்?
20. தாயுமானவரின் பரநடையும் உலக நடையும்
21. இன்பம் பெறும் வழி யாது? தாயுமானவர்
22. தாயுமானவர் பாடல்களில் மனம்
23. தாயுமானவர் வழிபாடு ஏன்?
24. தாயுமானவருக்கு மறுபிறவி உண்டா?
25. கல்லாத பேர்களே நல்லவர்கள் தாயுமானவர்
26. கடவுளின் விலாசம் தருகிறார் தாயுமானவர்
27. தாயுமானவர் எதை பலி கொடுக்கச் சொன்னார்?

28. தாயுமானவர் தரும் இறைவழிபாடு
29. தாயுமானவருடன் வாழ்வோம்
30. தாயுமானவரின் உவமைகள் 100

## ஜென்னும் திருவாசகமும்

1. ஜென்னும் திருவாசகமும் பாகம் 1
2. ஜென்னும் திருவாசகமும் பாகம் 2
3. ஜென்னும் திருவாசகமும் பாகம் 3

## புலவர் தியாகராஜனார்

1. குருவுடன் வாழ்ந்தவர்
2. வரலாறு போற்றும் குரு சீடர்கள்
3. புலவர் தியாகராஜனார் அரிய செய்திகள் 100
4. குரு பக்தியின் வடிவம் புலவர் தியாகராஜனார்

## மன்னார்குடி

1. மன்னார்குடி மன்னார்குடிதான் அரிய செய்திகள் 1000
2. ஞாபகம் வருதே ஊர் ஞாபகம் வருதே!
3. மன்னார்குடி வரலாறு

## தன்னம்பிக்கை தன்னம்பிக்கை

1. தன்னம்பிக்கை மலர்கள்.
2. டென்சனை வெல்வது எப்படி?
3. காலமே உன் உயிர்
4. வேதாத்திரி மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்.
5. ஓய்வுக்குப் பின்னும் உற்சாக வாழ்க்கை
6. தன்னம்பிக்கை மலர்கள்

## சிறுகதைகள்

1. செயலே விளைவு
2. தவம்
3. தொலைந்து போன உறவுகள்
4. பத்மாவும் கதவும்

## ஆராய்ச்சி

## பானுகுமார் படைப்புலகம்


1. நானும் என் எழுத்தும்
2. நீங்களும் எழுதலாம் வாங்க
3. புத்தகம் எழுதலாம் வாங்க
4. வேதாத்திரியத்தில் எழுதலாம் வாங்க
5. ஒப்பாய்வு இலக்கியம் எழுதலாம் வாங்க
6. நான் ஏன் எழுதுகிறேன்

## கம்பனும் வேதாத்திரியமும்

1. கம்பனும் வேதாத்திரியமும் 1 (இலக்கிய திறனும் கருத்தியலும்)
2. கம்பனும் வேதாத்திரியமும் 2 (நாடும் அரசும்)
3. கம்பனும் வேதாத்திரியமும் 3 (இறை சிந்தனைகள்)
4. கம்பனும் வேதாத்திரியமும் 4. (மானுடம் வென்றதம்மா)



1. Vethathiriam banukum (Youtube channel)
2. Thayumanavar banukumar (Youtube channel)
3. Kumar vadivelu (Youtube channel)




vethathiriam Banukumar

## (Youtube channel) Titles

1. வேதாத்திரி மகரிஷி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள் பாகம்
2. வேதாத்திரி மகரிஷி ஒப்பாய்வு இலக்கியம் பாகம் 1
3. வேதாத்திரி மகரிஷி ஒப்பாய்வு இலக்கியம் பாகம் 2
4. விவேகானந்தரும் வேதாத்திரி மகரிஷியும் பாகம் 1
5. விவேகானந்தரும் வேதாத்திரி மகரிஷியும் பாகம் 1
6. விவேகானந்தர் கதைகளும் வேதாத்திரியமும்
7. ராமகிருஷ்ணர் கதைகளும் வேதாத்திரியமும்
8. ஸ்ரீராமகிருஷ்ணரும் வேதாத்திரி மகரிஷியும்
9. பட்டினத்தாரும் வேதாத்திரி மகரிஷியும்
10. பென்ஞமின் பிராங்களினும் வேதாத்திரி மகரிஷியும்
11. மாக்கிய வெல்லியும் வேதாத்திரி மகரிஷியும்
12 தாயுமானவரின் சுகவாரியும் வேதாத்திரியாரின் பேரின்ப ஊற்றும்
13. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பரசிவ வணக்கம்.
14. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பரிபூராணானந்தம்
15. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆனந்தமான பரம்
16. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் மௌனகுரு வணக்கம்
17. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் தேஜோ மயானந்தம்
18. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பொருள் வணக்கம்
19. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சின்மயானந்த குரு
20. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் பிடித்த பத்து
21. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அதிசயப் பத்து
22. வேதாத்திரிய பார்வையில் திருவாசகத்தின் பிரார்த்தனைப்பத்து
23. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அடைக்கலப் பத்து
24. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குழைத்த பத்து
25. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆசைப் பத்து
26. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் செத்திலா பத்து
27. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் உயிர் உண்ணிப் பத்து
28. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் யாத்திரைப் பத்து.
29. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அச்சப் பத்து
30. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அச்சோ பதிகம்
31. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சிவபுராணம்
32. மாணிக்கவாசகரும் வேதாத்திரி மகரிஷியும்
33. புத்தக வெளியீடு

34. வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 1
35. வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 2
36. வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 3
37. வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 4
38. வேதாத்திரியப் பார்வையில்பாரதியாரின் மானுட சிந்தனைகள்
39. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் ஞானப் பாடல்கள்
40. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் பிரம்மஞானம்
41. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் தத்துவ பாடல்கள்
42. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 1
43 .ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 2
44. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 3
45 ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 4
46. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 5
47. காலமெல்லாம் வேதாத்திரியம்
48. வேதாத்திரியப் பார்வையில் ஆழ்வார்கள் காட்டும் முக்தி
49. என்னைச் செதுக்கிய நூல்
50. தினசரி தியானம் சனவரி
51. தினசரி தியானம் பிப்ரவரி
52. தினசரி தியானம் மார்ச்
53. தினசரி தியானம் ஏப்ரல்
54. தினசரி தியானம் மே
55. தினசரி தியானம் ஜூன்
56. தினசரி தியானம் ஜூலை
57. தினசரி தியானம் ஆகஸ்டு
58. தினசரி தியானம் செப்டம்பர்
59. தினசரி தியானம் அக்டோபர்
60. தினசரி தியானம் நவம்பர்
61. தினசரி தியானம் டிசம்பர்
62. தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 1
63. தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 2
64. தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 3
65. தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 4
66. தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 5
67. தாயுமானவர் ஒப்பாய்வு இலக்கியம்
68. ஜென் புத்தரும் தாயுமானவரும் பாகம் 1

69. ஜென் புத்தரும் தாயுமானவரும் பாகம் 2
70. ஜென் புத்தரும் தாயுமானவரும் பாகம் 3
71. தாயுமானவரின் ஆனந்தக்களிப்பு
72. மாணிக்கவாசகர் சிந்தனைகள்
73. ஜென்னும் திருவாசகமும் பாகம் 1
74. ஜென்னும் திருவாசகமும் பாகம் 2
75. ஜென்னும் திருவாசகமும் பாகம் 3
76. புலவர் தியாகராஜனார் பாகம் 1
77. ஞாபக அலைகள் (மன்னார்குடி) பாகம் 1
78. ஞாபக அலைகள் (மன்னார்குடி) பாகம் 2
79. அறிவியல் நோக்கில் ஆன்மீகச் சிந்தனைகள் பாகம் 1
80. அறிவியல் நோக்கில் ஆன்மீகச் சிந்தனைகள் பாகம் 2
81. அறிவியல் நோக்கில் ஆன்மீகச் சிந்தனைகள் பாகம் 3
82. ஆன்மீகம் ஆன்மீகம்
83. டென்சனை வெல்வது எப்படி? பாகம் 1
84. டென்சனை வெல்வது எப்படி? பாகம் 2
85. டென்சனை வெல்வது எப்படி? பாகம் 3
86. தன்னம்பிக்கை தன்னம்பிக்கை
87. சுயமுன்னேற்றம்
88. பத்திரகிரியார் சிந்தனைகள்
89. மன்னார்குடி
90. ஆராய்ச்சி - நன்மக்கட்பேறு
91. பொதுவானவை
92. மனைவிக்கு மரியாதை
93. திருமூலர் சிந்தனைகள்.
94. ஆண்டாள் சிந்தனைகள்
95. திருமழிசைஆழ்வார் சிந்தனைகள்
96. திருக்குறள் சிந்தனைகள்
97. அப்பர் சிந்தனைகள்
98. பட்டினத்தார் சிந்தனைகள்
99. பட்டினத்தார் ஒப்பாய்வு
100. சிவவாக்கியார் சிந்தனைகள்
101. ஔவையார் சிந்தனைகள்
102. சித்தர்கள் சிந்தனைகள்
103. திருமங்கையாழ்வார்

104. வள்ளலாரின் சிந்தனைகள்
105. பசி என்னும் பாவி
106. பொருள் வறுமையா? அறிவு வறுமையா?
107. Retirement Speech
108. Audio speech part 1
109. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அருட்பத்து
110. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அற்புதப்பத்து
111. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அன்னைப்பத்து
112. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் கண்டபத்து
113. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குயிற்பத்து
114. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சென்னிப்பத்து
115. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் புணர்ச்சிப்பத்து
116. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் வாழாப்பத்து
117. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குலாப்பத்து
118. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆனந்த பரவசம்
119. மனவளக்கலையில் வாசி யோகமா?
120. வேதாத்திரியம் மானுட வேதம்
121. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் மலைவளர்க் காதலி
122. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் எங்கும் நிறைகின்ற பொருள்
123. வேதாத்திரியப் பார்வையில் கருணாகரக் கடவுள்
124. மனவளக்கலையின் மகத்துவம்
125. அருட்தந்தையே நீ ஒரு அற்புதம்
126. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவர் காட்டும் ஆறு பகைவர்கள்
127. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் இறைவழிபாடு
128. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் எந்நாள் கண்ணி பாகம் 1
129. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் அருள்தாகம்
130. முதுமையிலும் உற்சாக வாழ்க்கை பாகம் 1
131. முதுமையிலும் உற்சாக வாழ்க்கை பாகம் 2
132. முதுமையிலும் உற்சாக வாழ்க்கை பாகம் 3
133. புலவர் தியாகராஜனார் வாழ்வில் சுவையான நிகழ்ச்சிகள் பாகம் 2

134. புலவர் தியாகராஜனார் வாழ்வில் சுவையான நிகழ்ச்சிகள் பாகம் 3

135. தாயுமானவரின் தத்துவங்கள்

136. வேதாத்திரியத்தில் கலந்த நதிகள் (வேதாத்திரியம் ஒப்பாய்வு 2)

137. பேரக்குழந்தைகளை மகிழ்வது எப்படி?

138. வேதாத்திரியப் பார்வையில் மனிதனும் மதமும் பாகம் 1

139. திருமந்திரமும் வேதாத்திரியமும்

140. நன்மக்கட்பேறு 100 நற்சிந்தனைகள்

141. நானும் என் எழுத்தும்

143. நீங்களும் எழுதலாம் வாங்க

144. புத்தகம் எழுதலாம் வாங்க

145. வேதாத்திரியத்தில் எழுதலாம் வாங்க

146. ஒப்பாய்வு இலக்கியம் எழுதலாம் வாங்க

147. நான் ஏன் எழுதுகிறேன்.

148. வாழ்க்கையை வெற்றி கொள்வது எப்படி? (வேதாத்திரியப் பார்வையில் 100 டிப்ஸ்)

149. மானுடம் சிறந்த வாழ்க்கை வாழ வேதாத்திரியத்தின் பத்து கட்டளைகள்.

150. கம்பனும் வேதாத்திரியமும் (இலக்கியத் திறனும் கருத்தியலும்)

151. சிறுகதைகள்


குரு அருள்
வாழ்க வளமுடன்
மிகச் சிறந்த
ஆன்மீக
சொற்பொழிவுகளுக்கு
யூடியூப்
சேனல் பெயர்
YouTube
VETHATHIRIAM BANUKUMAR
Subscribe
கண்டு பேரின்பம் அடைவோம்
சப்ஸ்கிரைப் செய்வோம்
பிறருக்கும் பகிர்வோம்